# பத்திரிக்கைச் செய்தி

சேலம் மாவட்டத்தில் குடும்பம் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தேவைப்படும் அவசரகால மீட்பு, மருத்துவ உதவி, மனநல ஆலோசனை, காவல் உதவி, சட்ட உதவி, தற்காலிக தங்குமிடம் ஆகியவற்றை வழங்கி அவர்களை பாதுகாக்க மத்திய அரசினால் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் சேலம் மாவட்டத்தில் சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையம் ஆகஸ்டு 2018 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது சேலம் மாவட்டத்தில் உள்ள சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் (சேலம்–I) காலியாக உள்ள தற்காலிக பணியிடங்களை நிரப்புதல் பொருட்டு கீழ்க்கண்ட நிலைகளில் ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சேலம்–I ஒருங்கிணைந்த சேவை மையத்தில் விண்ணப்பிக்க விருப்பமுள்ள தகுதியான நபர்கள் www.salem.nic.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து தங்களது சுய விபரங்களை பூர்த்தி செய்து உரிய சான்றுகளை விண்ணப்பத்துடன் இணைத்து 21.08.2026 அன்று மாலை 05.00 மணிக்குள் மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், அறை எண்,126 என்ற முகவரிக்கு நேரிலோ, அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கத் தெரிவிக்கப்படுகிறது.

**முகவரி:**

மாவட்ட சமூக நல அலுவலர்,
மாவட்ட சமூக நல அலுவலகம்,
அறை எண்.126, முதல் தளம்,
மாவட்ட ஆட்சியரகம்,
சேலம் – 636001

**வழக்குப் பணியாளர் பணியிடம் :** 2 (**Case Worker** )

**தொகுப்பூதியம் : ரூ. 18,800/–**

**கல்வித் தகுதி : BSW / MSW /Psychology** – சமூகப்பணி மற்றும் உளவியல் பாடப்பிரிவில் இளங்கலை/ முதுகலைப்பட்டம்

**வயது வரம்பு** : 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**முன் அனுபவம் :**

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் அரசு / தனியார் நிறுவனங்களில் 3 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்
- பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். 24 மணி நேரமும் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படும்

**காவலர் பணியிடம் :** 1 **(Security Guard)**

**தொகுப்பூதியம் : ரூ. 12,000/–**

**கல்வித் தகுதி** : குறைந்தபட்சம் 10 ஆம் வகுப்பு

**வயது வரம்பு** : 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**முன் அனுபவம் :**

- அரசு / தனியார் அலுவலகத்தில் பணிபுரிந்த 2 வருட முன் அனுபவம் இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் உள்ளூரைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

- 24 மணி நேரமும் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படும்.
- காவலர் பணியிடத்திற்கு வாகனம் ஓட்டுபவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**பல்நோக்கு உதவியாளர் பணியிடம் : 1 (Multi Purpose Helper)**

**தொகுப்பூதியம்** : ரூ. 10,000/-

**கல்வித் தகுதி** : குறைந்தபட்**சம்** 10 ஆம் வகுப்பு தேர்ச்சி.

**வயது வரம்பு** : 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.

- அரசு / தனியார் அலுவலகத்தில் பணிபுரிந்த 2 வருட முன் அனுபவம் இருக்க வேண்டும்.
- நன்கு சமையல் தெரிந்த பெண் சமையளாராக இருக்க வேண்டும்
- 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணி அமர்த்தப்படும். உள்ளூரைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்

ELAMBAHAVATH K
04-08-2026
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**சேலம்.**

## One Stop Centre, Salem.
## Application Form

| | | |
|---|---|---|
| **Post Applied For** | | **Affix Recent Passport Size Photo** |
| **Name** | | |
| **Mobile Number** | | |
| **Residential Address** | | |
| **District** | | |
| **Age and DoB** | | |
| **Education (Degree/Provisional Certificate copy to be enclosed)** | | |
| **Years of Experience (Experience Certificate to be enclosed)** | | |
| **Police Verificaton Certificate** | | |
| **Community Certificate** | | |
| **Aadhaar Card** | | |
| **School TC/Mark Sheet** | | |
| **Note* Applications not enclosed with above mentioned certificates shall strictly be rejected** | | |

**Date:**

**Signature of the candidate**